**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.13/2024

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ஐ 44/1969 பிரிவின்படி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 07.02.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– பாக்கியம், க/பெ. தங்கராஜ்</u>**

**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. வழக்கு சொத்து விஸ்தீரணம் 40 செண்ட். தாவா சொத்துக்கு தென்புறம் உள்ள சொத்தை செல்வநாதன் வாங்கியுள்ளார். சக்திவேலிடம் இருந்து செல்வநாதன் வாங்கியுள்ளார் என்றால் கொடிக்கால்காரரிடம் இருந்து வாங்கினார். அதற்கும் தெற்கே யாருடைய சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. நான் யாரிடமும் கையெழுத்து போடவில்லை. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை.

2. என்னுடைய மகன் பெயர் பாலமுருகன். பாலமுருகன் என்னுடன் உள்ளாரா என்றால் அவரது அப்பாவுடன் 2–3 வருடங்களாக இருக்கிறார். சாட்சி மீண்டும் பாலமுருகன் அவரது அப்பாவுடன் இருந்தார். தற்போது என்னுடன் உள்ளார் என சாட்சியமளிக்கிறார். பாலமுருகன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். வழக்கிற்கு உதவியாக பாலமுருகன் உள்ளார் என்றும், வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் வழக்கு விவரங்களை நானும், பாலமுருகனும் சேர்ந்து சொன்னோம்.

3. என் வீட்டின் அருகே உள்ள கருணாநிதி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. ஓடக்காரர் மகன் ரத்தினகுமார் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். பில்லாபாளையம் தலைவர் வாசுதேவன் என்பவரை தெரியும். பில்லாபாளையம் முத்துசாமி மகன் ராமசந்திரன் என்பவரை தெரியும். ராமசந்திரன், ரத்தினகுமார், வாசுதேவன் ஆகியோர்களுக்கும் எனக்கும் விரோதம் எதுவும் இல்லை. என்னிடம் காட்டப்படும் 17.08.2005 ம் தேதியிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை.

4. வழக்கிற்கு முன்பாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு 2 ம் பிரதிவாதிக்கு அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பில் சுவாதீனம் 2 ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றும், அதை ஒப்படைக்க சொல்லி சொல்லியுள்ளேன் என்றால்

சொத்தை கேட்டேன். 2ம் பிரதிவாதியிடம் ஜீவனாம்சம் கேட்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை நான் விலைக்கு வாங்கினேன். நான் ராசுபிள்ளையிடமிருந்து விலைக்கு வாங்கினேன். தாவா சொத்து என்னுடையது என்றும், அதனால் அதை விற்கக்கூடாது என கேட்டுள்ளேனா என்றால் ஆமாம்.

5. 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியிடம் இருந்து தாவா சொத்தை வாங்கியுள்ளார். 2ம் பிரதிவாதி சொத்தை வாங்கும்போது, சொத்தை வாங்கக்கூடாது என சொன்னேனா என்றால் எனக்கு தெரியாமல் விற்றுவிட்டார். சாட்சி மீண்டும் வாங்கக்கூடாது என சொன்னேன் என சாட்சியமளிக்கிறார். நான் சொன்னதை மீறி விலைக்கு வாங்கினார் என சொல்கிறேனா என்றால் ஆமாம். சொத்தை வாங்கியவுடன் நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் கலெக்டர் ஆபிஸில் மனு கொடுத்தேன். கலெக்டர் ஆபிஸில் வக்கீல் மூலம் மனு கொடுத்தேனா என்றால் நானாக கொடுத்தேன்.

6. நான் மனு கொடுத்தபோது பாலமுருகன் என்னுடன் இருந்தாரா என்றால் ஆமாம். பாலமுருகன் B.Sc., படித்துள்ளார். கலெக்டர் ஆபிஸில் கொடுத்த மனுவை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். வழக்குரையில் கலெக்டர் ஆபிஸில் மனு கொடுத்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறியுள்ளது. 2ம் பிரதிவாதி வாய்தா செலுத்தி வருகிறாரா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு நான் வாய்தா செலுத்தியுள்ளேனா என்றால் என் கணவர் செலுத்தியுள்ளார். நான் செலுத்தவில்லை.

7. எனக்கும், என் கணவருக்கும் விரோதமில்லை என்றால் விரோதம் தான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் கணவர் 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். **30.04.2009ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் பாலமுருகன் கையெழுத்து செய்துள்ளார். எனக்கு தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கோர எவ்வித அடிப்படை உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் மகன் பாலமுருகன் தான் என்னை, இந்த வழக்கை தாக்கல் செய்ய தூண்டியுள்ளார் என்றால் சரியல்ல.

8. ஜீவனாம்சம் வழக்கின் போது, 2ம் பிரதிவாதியிடம் கையெழுத்து வாங்கவில்லை. ஜீவனாம்சம் வழக்கில் 2ம் பிரதிவாதி தரப்பினர் அல்ல.

வா.சா.ஆ.1 ஆவணம் 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u> இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/−M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.